[1974 சனவரி 21

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) கிராம ஊரக வளர்ச்சித் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில், கி.மீ. 14/2 மதுரை மண்டபம் ரோடிலிருந்து பிரிந்து செல்லும் கறுகர் கடை சாலே மேம்பாடு செய்வதற்கான வேலே எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மேற்படி சாலேயின் குறுக்கே திருப்புவனம் வாய்க்காலில் குழாய் கண்ணுள்ள தரைப்பாலமும் கட்டப்படும்.

திரு. த. சோணேயா : திருப்புவனம் கால்வாயில் கட்டப்படுகிற பாலம் தரைப் பாலமாக இருக்கும் காரணத்தால் திருப்புவனம் கண்மாய்க்குப் போகிற தண்ணீர் தடைப்படும் என்று கருதி அந்த ஊர்க்காரர்கள் கோர்ட்டுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலே ஏற்பட்டிருக்கிறது. அதை மேம்பாலமாகக் கட்டித்தர அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஒப்புதல் அளிக்கப் பட்டிருப்பதற்குத்தான் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் அதுபற்றிப் பரிசீலனே செய்வது என்றல் காலதாமதம் ஏற்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பிரச்சினேயைத் தீர்த்து வைப்பார்களானல் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியும்.

வடவாறு, வெட்டாறுகளின் குறுக்கே பாலம் அமைப்பு.

*55 வினு—**திரு. துரை கோவிந்தராசன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில், பனவெளி, தென்பறம்பூர் கிராமங்களே இணைக்கும் வகையில் வடவாறு, வெட்டாறு தலேப்பில் பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலே மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லே.

(இ) இக்கேள்விக்கு இடமில்லே.

1974 சனவரி 21]

திரு. துரை கோவிந்தராசன்: தஞ்சை மாவட்டத்திலுள்ள தென்பறம்பூர், பனவெளி கிராமங்களைத் தஞ்சையோடு இணைக்கும் வகையில் பாலம் கட்டவேண்டுமென்ற கோரிக்கை நீண்ட காலமாக இருக்கிறது. 1962-ல் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்தத் தொகுதியில் நின்ற போது அதற்கு வாக்குறுதி கூடத் தந்தார்கள். அது நீண்டகாலமாக நிறைவேற்றப்படாமல் இருந்து வருகிறது. இது உள்ளாட்சித் துறையில் வந்திருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. இது பொதுப் பணித்துறையில் இருக்க வேண்டிய ஒன்று அல்லவா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : கேட்கப்பட்ட கேள்வி ஊரக வளர்ச்சித் துறை பற்றியது. சாலைகள் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இது கேட்கப்பட்டிருக்கிறது. இதுபற்றி பரிசீலனைக்கு முன்பு எடுத்துக் கொள்ளப்பட்டு 12½ லட்சம் ரூபாய் ஒதுக்க வேண்டு மென்று சொல்லப்பட்டது. இப்போது இந்த வேலைகளை ஊரக வளர்ச்சித் துறை எடுத்துக் கொள்ள இயலாது என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. இதைப் பற்றி மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க பெருந்து சாலை களைப் பராமரிக்க அரசு எடுத்துக் கொள்ளும் திட்டத்தில் சேர்த்துக் கொள்வது பற்றித் தலைமைப் பொறியாளருடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

புனவாசிப்பட்டியில் சமுதாயக்கிணறு அமைப்பு

* 56 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், புனவாசிப்பட்டி கிராமத்தில் சமுதாயக்கிணறு தோண்ட அரசு எப்போது ஆணை பிறப்பித்தது ?

(இ) அந்த ஆணை மீது இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

(உ) சமுதாயக்கிணறு வெட்டுவதில் காலதாமதம் ஏற்பட்ட தற்கு உரிய காரணம் என்ன ?